**20.11.2025**

அ.வ.எண். **38/2021**

<u>பி.சா.**1** ஏழுமலை குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

**1.** வாதிக்கு நான் கிரையம் கொடுப்பதற்கு முன்பு தாவா எ அட்டவணை சொத்தை நான்தான் அனுபவித்து வந்தேன் என்றால் சரிதான். ரோட்டிலிருந்து தாவா எ அட்டவணை சொத்தை அடைவதற்கு தாவா பி அட்டவணை சொத்தைதான் நான் வழியாக பயன்படுத்தி வந்தேன் என்றால் சரிதான். தாவா எ அட்டவணை சொத்தை அடைவதற்கு ரோட்டிலிருந்து தாவா பி அட்டவணை சொத்தின் வழியாகதான் வாதி செல்ல வேண்டும் என்றால் நான் தாவா பி அட்டவணை சொத்தில் இரண்டு பக்கத்தில் வழிக்காக நிலத்தை ஒதுக்கி கொடுத்துள்ளேன். தாவா பி அட்டவணை சொத்தை வாதி வழியாக பயன்படுத்துவதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் நான் ஒதுக்கி கொடுத்த இடத்தை பாதையாக பயன்படுத்துவதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

**2.** எனது பதிலுரை மற்றும் பிரமாணவாக்குமூலத்திலும் மேற்சொன்ன பி அட்டவணை சொத்தில் வாதிக்கு இரண்டு பக்கம் வழிக்காக இடம் ஒதுக்கியுள்ளேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். **06.04.2021** அன்று வாதி பி அட்டவணை சொத்தை வழியாக பயன்படுத்திய போது நான் வாதியிடம் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. வாதி **60** பனை மரங்களை வெட்டியதால் பிரச்சனை ஏற்பட்டது. நான் வாதியின் மீது மரத்தை வெட்டிவிட்டார்கள் என்று புகார் அளித்தேனா

என்றால் இல்லை. எப்போது வாதி மரத்தை பிடுங்கினார் என்றால் சுமார் 2010ம் வருடம் இருக்கும், தேதி ஞாபகமில்லை. எனது பதிலுரை மற்றும் பிரமாணவாக்குமூலத்திலும் வாதி பனை மரத்தை பிடுங்கிவிட்டார் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. நான் தற்போது வழக்கிற்காக வாதிக்கு எதிராக பனை மரத்தை பிடுங்கிவிட்டார் என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தில் நான் கொடுத்த இடத்தில் தான் வாதி வழியாக பயன்படுத்தி வருகிறாரா என்றால் சரிதான். நான் ஒதுக்கி கொடுத்த வடக்கு பக்க இடத்தின் ஜக்குபந்தி என்னவென்றால் வடக்கு பக்கம் என் சித்தப்பா ஜெயராமன் வீடு, தெற்கே காலி புறம்போக்கு, கிழக்கே ரோடு, மேற்கே நான் கிரையம் கொடுத்த எ அட்டவணை சொத்தாகும். தாவா பி அட்டவணை சொத்தில் வடக்கு பக்கம் மற்றும் தெற்கு பக்கம் வழிக்காக வாதிக்கு கொடுத்துள்ளேன்.

4. தெற்கு பக்கத்தின் ஜக்குபந்தி என்னவென்றால் வடக்கு பக்கம் புறம்போக்கு நிலம், தெற்கு பக்கமும் புறம்போக்கு நிலம், கிழக்கே சாலை, மேற்கே தாவா எ அட்டவணை சொத்தாகும். (சாட்சி தானாக முன்வந்து நான் ஒதுக்கி கொடுத்த இடத்தை வாதி பயன்படுத்துவதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை மற்றும் நடு பகுதியில் உள்ள இடத்திற்கு வாதி பிரச்சனை செய்து வருகிறார்). தாவா பி அட்டவணை சொத்து முக்கோணம் வடிவில் உள்ளதென்றால் சரிதான். வா.சா.ஆ.3 தாவாசொத்தை காட்டுவதற்கான மாதிரி வரைபடம் சரிதானா என்றால்

சரிதான். நான் வழியாக ஒதுக்கப்பட்ட இடம் சுமார் **20** செண்ட் நிலம் இருக்குமா என்றால் இருக்கும்.

**5**. பி அட்டவணை சொத்தில் சர்வே எண்.**293/1**ல் மொத்த விஸ்தீரணத்தில் **20** செண்ட் நிலத்தை வாதி வழியாக பயன்படுத்துவதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை அவ்வாறு வழக்கு தீரப்பாவதற்கும் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.